752

Aurora Film Corporation presents

# PURNA CHANDRA



A N EATRES SUPER RELEASE

O-, 2MDS, F
M35
183794

Audiography by
LOKEN BOSE

Photography by
YUSUF MULJI

*A Glorious Tribute . .*
*To a Glorious Picture!*

# *Never has any Tamil Talkie Received Such Thunderous Acclaim!!*

"Bound to be acclaimed as one of the best Tamil pictures that has been released in Madras . . . Recording is flawless . . . Photography is uniform and smooth."

— **Indian Express**

"The film is well mounted and recorded. The general standard of acting is fair. . . ." —**Hindu**

"Poorna Chandra" is a successful production. All the characters therein are being portrayed with a good amount of realism. Music and dialogue are neatly executed while the scenic effects are rendered faultless . . ."

—**Justice**

"A Good Picture. . . . . The Settings, Photography, Music and Recording of this picture are good . . . All the players have acquitted themselves creditably notably Mr. V. S. Mani, Nott Annajee Rao & Miss Lakshmi Devi" —**Sunday Times**

# New Theatres, Limited

PROUDLY PRESENTS

# POORNA CHANDRA

**The Tamil version of their Super Production**

## "PURAN BHAKT."

---

## CAST.

| | | |
|---|---|---|
| Puran | ... | Mr. V. S. Mani |
| King ... | ... | „ Anantaraman |
| 1st Queen | ... | Miss P. S. Gnanambal |
| 2nd Queen | ... | „ Radhabai |
| Rani Sundara | ... | „ Lakshmi Devi |
| Mandooka *Puran's friend* | } | Mr. R. Rangabashyam |
| Guru Goraknath | ... | „ Nott Annajee Rao. |

AND OTHERS

---

## Production Staff.

| | | |
|---|---|---|
| Director | ... | Mr. D. R. Das |
| Photography | ... | „ Yusoff Mulji |
| Audiography | ... | „ Loken Bose |
| Musical score | ... | „ Nott Annajee Rao. & |
| | | „ S. G. Chellappa Iyer. |

---

*Distributors:–*

**AURORA FILM CORPORATION**

66, Armenian Street,

MADRAS.

# SYNOPSIS.

Our tale begins in one of these delicious vales, the beauty, the wealth and the picturesqueness of which were the talk of the entire world. And it was in the hoary days of India's glorious past that a powerful king named Saliavahan ruled this beautiful kingdom of Salavapur. Possessed of wealth, power and every other lineament that contributes its share of happiness, the king was not happy. One black spot there was in the king's material possession, that harrowed up his very soul, he was childless. At last the days of austere penance and severe prayer gave the king his desired object and one happy morning the king heard that his beloved queen Rani Lalitha Devi had borne him a son.

Great were the rejoicings in the entire kingdom. But this jubilation was not long to last. The preceptor of the Royal household Guru Goraknath had predicted that much evil will befall the kingdom if the king saw his son before the latter was aged 16. And the poor king had to give away his son to the priest to be brought up by him till he attained his 16th year.

The lapse of the 16 years saw the young prince Poorna Chandra well versed in all the manly arts. Tutored as he was under the diligent care of Guru Goraknath, every trait of nobility adorned him. His father who was yearning to embrace his son, sent his messengers to bring him to the Royal household. And here fate played one of its wily pranks.

A few years after the birth of, his son the king had married again a young girl named Sulochanadevi. And this woman being young and passionate, held an overweening passion for young Poornachandra In vain she sought to weave her silken chains around him when he came to the Royal household; Poorna spurned her and forcibly

freed himself from her voluptuous embraces. The ire of the young queen was up. Her love for the young prince had gone. And there came in its stead the cruel monster, Hate. Suddenly she raised a hue and cry. And attracted by this, the king, who was coming to her chamber entered her apartment; Sulochana fell at his feet and accused Poorna of molesting her. The king was sorely grieved at the misconduct of his son. But he allowed Justice to take its own course. And he ordered his servants to fling Poorna Chandra into a well after cutting off both his hands.

Guru Goraknath comes to know of this by his divine sight, and he immediately proceeds to the well where Poorna was hurled. Rescuing him the sage joins together his severed hands and brings him up at his Ashram.

Meanwhile Rani Lalitha Devi who was fondly expecting to feast her eyes by gazing upon her beloved son, hears of Poorna's fate; sorrow of an indescribable nature takes possession of her and she spends her time crying out "Poorna."

Guru Goraknath sends Poorna Chandra for Biksha to the court of Rani Sundara, who rules over the amazon kingdom of Malwa, to find out how far his disciple was firm in the vow of renunciation. Rani Sundara falls in love with him, but Poorna resists all temptations. At that time he hears that Krurasan, the minister of the kingdom of Salavapur had captured his father and mother and had made himself the monarch of that kingdom. Guru Goraknath sends Poorna Chandra to rescue his parents; and Rani Sundara also starts for Salavapur in male attire. There they are able to rescue the king and the queen. There, he, learns that the soldier who fought side by side with him was none other than Rani Sundara. Guru Goraknath appears on the scene and commands him to marry Rani Sundara which he does cheerfully.

THE END.

# "பூர்ண சந்திரன்"

## தமிழ் பேசும் படம்.

கல்கத்தாவிலுள்ள நியூ தியேடர்ஸ் ஸ்டுடியோவில் புகைப்படமெடுத்து தயாரிக்கப்பெற்ற இந்த "பூர்ண சந்திரன்' எனும் பேசும் படச்சரிதையானது 1933-ம் வருஷத்தில் பேசும் இந்திய படக்காக்ஷிகளுள் முதன்மை ஸ்தானம் பெற்றிருந்த "பூரன் பக்த்" எனும் ஹிந்தி பாஷாப் படத்தைத் தழுவித் தயாரிக்கப்பெற்றதாகும். இத்தமிழ்ப் படம் முதல்தரமாயிருக்குமென்பதற்கு சிறிதும் ஆக்ஷேபமின்று. ஹிந்தி சண்டிதாஸ், யாஹூதிகி லட்கி ஆகிய இப் படங்களைத் தயாரித்த புலமையாளர்களே இத் தமிழ்ப் படத்தையும் முன்கொணர்ந்திருக்கிறார்கள். இதில் மிஸ்டர் வி. எஸ்.மணி பூரனாகவும், மிஸ்டர் நாட் அண்ணாஜிராவ் கோரக்நாத்தாகவும், ஸ்ரீமதி லக்ஷ்மிதேவி சண்டைக்கார ராணியாகவும், ஸ்ரீமதி ராதாபாய் 2-வது அரசிளங்குமாரியாகவும் வேடம் பூண்டு நடித்திருப்பதே இப்பேசும் படத்தின் உயர்வுக்குச் சான்று. இதன்கண்ணுள்ள பாட்டுக்களும் சம்பாஷிப்புக்களும் மெஸர்ஸ் எஸ்.ஜி.செல்லப்பாஐயராலும் என்.அண்ணாஜிராவினாலும் கவனஞ் செய்யப்பட்டுள்ளன. இந்த "பூர்ணசந்திர"னின் சரிதைச் சுருக்கம் வருமாறு:—

### ஸந்தானபாக்கியம்.

சாலவபுரியைப் பரிபாலித்து வந்த சாலிவாகனனுக்கு லலிதாதேவியெனும் மகிஷி இருந்தனள். சகலவிதமான ஐசுவர்யங்கள் இருந்தும் புத்திரபாக்கியம் மாத்திரம் அவர்களுக்கில்லை. அது காரணமாக சுலோசனா தேவி எனும் வனப்பும் வரிசையும் வாய்ந்த வனிதா ரத்தினத்தை இரண்டாவது மனைவியாக மணந்துகொண்டான் அரசன். எப்போதும் இளையாளிடம் மோஹம் மிகுந்திருந்த அரசன் பலநாட்களுக்குப் பிறகு லலிதாதேவி கர்ப்பந் தரித்ததுகண்டு மனம் பூரிக்கலானான். அழகே உருவாயமைந்த மதிமுகத்துடன் ஆண் மகவு ஒன்று லலிதாதேவிக்கு பிறக்க, அக்குழந்தையின்முக கலா விலாஸங்களையும் சாமுத்திரிகா லக்ஷணங்களையும்உணர்ந்த முதியோர் கூறிய பிரகாரம் அதற்கு "பூர்ண சந்திரன்" எனபெயரிட்டார்கள். அதே சமயம் குருவும் திரிகாலஞானியுமான கோரக்நாதர் எனும் பெரியார் அரசன் முன்தோன்றி அக்குழந்தைக்கு 16 வயதாகும் வரையில் அரசனும் அவனது மனைவியும் பார்க்கலாகாதென்றும், அதுபரியந்தம் தாம் அச்சிசுவைக் கொண்டுபோய் வளர்த்துப்பிறகு தகுந்த வயதுவந்ததும் கொண்டுவந்துவிடுவதாகவும் சொல்லிக்குழந்தையைக் கொண்டேகினார். மகவைப் பிரிந்த மகீபதிமனத்துயரமுற்று சில தினங்களைக்கழித்துக் காலக்கிரமத்தில் குருவின் ஆக்ஞையைச்சிரமேல் தாங்கி நாட்களைக் கழித்துவந்தான்.



## புத்திர பாசம்.

நாட்கள் வாரங்களாயின, வாரங்கள் மாதங்களாயின, மன்னனின் மனத்தினின்று மகஞாபகம் மாத்திரம் மறையவில்லை. மதிமுகங்கொண்ட பூர்ணசந்திரனிடம் பூர்ண பாசம் வைத்த அரசன் குருசொன்ன 16 ஆண்டுகள் எப்பொழுது நிறையுமென சிந்தித்தவாறே இருந்து காலங்கடத்திவந்தனன் இரவும் பகலுமாகக் காலசக்கரம் சுற்றிக்கொண்டே 16 ஆண்டுகள்கழிந்தமையால், சாலிவாகனன் தன் மந்திரி பிரதானிகளையழைத்து தன் மகவை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தனன். அவர்களுந் தகுந்த மரியாதைகளோடும், முஸ்தீப்புக்களோடும் குருவின் ஆசிரமம் சென்று பூர்ணசந்திரனை அழைத்துவந்தார்கள். வாத்சல்யத்தோடு வரவேற்றான் சாலிவாகனன் தன் அருந்தவபுதல்வனான பூர்ணசந்திரனை.

## விரகதாபத்தின் சேஷ்டை.

16 ஆண்டுகள் தனயனைவிட்டுப் பிரிந்த தந்தை திடீரென தன் ஆத்மாவே உருவெடுத்துப் புத்திரனாக ஆவிர்ப்பவித்த பூர்ணசந்திரனைப்பார்த்து பார்த்து உளம் பூரித்தான். சரீரம் புளகிதமடைய மானசீகத் திருப்தியடைந்தவனாய்த் தன் மகனிடம் அத்யர்த பிரேமையோடு தன் லக்ஷியமனைத்தையும் பூர்ண சந்திரன்மீதே வைத்திருந்தான், சகலசௌபாக்யங்களும்; நிரம்பித் ததும்புவதாக சாலவபுரி மன்னன் ஆனந்தித்திருந்த தறுவாயில் அவனுடைய இளையராணியான சுலோசனாதேவி சகலவிருத்தாந்தங்களையும் நன்குணர்ந்தாள். புன்முறுவல்பூத்த சுந்தர வதனத்தோடு வாலிப பருவத்திற்குரிய வளர்ச்சித்தோற்றங்கள் பிரதிபலிக்கும் பரமானந்த பருவத்தைப் பெற்றிருக்கும் பூர்ணசந்திரனிடம் இயற்கையாகவே வைக்கும் பிரேமையல்லாது சிற்றன்னையான சுலோசனை அளவுகடந்த காதலால்கட்டுண்டாள் தக்ஷணமே சரசரவென்று தன் பர்த்தாவான மன்னனையும், சக்களத்தியின் புதல்வனான பூர்ண சந்திரனையும் தனது அந்தப்புரத்திற்கு அழைத்துப்போய் ஆசார உபசாரங்களை அபரிமிதமாகச் செய்தனள். தனதன்பின் பெருக்கால் தனக்கு பூர்ணசந்திரனிடம் உள்ள பாச அபிநிவேசமானது வேரூன்றிபடர்வதை உய்த்துணர்ந்த அச்சிற்றன்னை தானே பாலன் பூர்ணசந்திரனை லலிதா தேவியிடம் அழைத்துச்செல்லுவதாகச் சொல்லி அரசனிடம்விடைபெற்றாள். அங்கிருந்து பூர்ண சந்திரனுடன் அரண்மனையைச் சார்ந்த வேறோர் தனியிடம் சென்றனள். உத்தரவின்றிப் பிறருடைய பிரவேசத்திற்கு இடமில்லாத அத்தனி இடத்திலே இவர்கள் ஏகாந்தமாயிருக்கையில் ஸ்திரீஸாகஸத்தினாலும், அளவுகடந்த காமாதுரத்தினாலும்கட்டுண்ட சுலோசனாதேவி பூர்ண சந்திரன் தனது புதல்வன் என்பதை அறவே மறந்து தனது இயற்கையாயுள்ள மடந்தைப்பருவத்தூண்டுதலினாலே அவன்மீதுள்ள விரகதாபத்தை அறிவித்தாள் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முன்பின்

உணாத விரகசேஷ்டைகள் முன்வந்து நிற்குமாதலின், அவைகளால் பலமாகப் பீடிக்கப்பட்டாள் பாவை சுலோசனை.

## பழி ஓரிடம், பாவம் ஓரிடம்.

கண்ணினுலும், கருத்தினுலும், நயத்தினுலும், பயத்தினுலும், கெஞ்சிக் குலாவியும், அண்டி அடிபணிந்தும் சுலோசனை பூர்ணசந்திரனைத் தனக்கிணங்கும்படி வற்புறுத்த, அவன் தன்னுலானவரையில் தடுத்துப்பார்த்தும், மற்றும் மற்றும் சுலோசனை மோகாவேசத்தையே வீசலாயினுள். எவ்வளவுதான் பூர்ணன் மறுத்தும் அதற்குச் சிறிதும் இடங்கொடாத சுலோசனையிடம் இனி தனித்துத்தங்கியிருப்பது தவறு என்றுணர்ந்து அவளது மோக ஆவேச ஊடாடல்களை மறுத்தும், பலவந்தச்செய்கைகளை வெறுத்தும்நின்ற சமயம் அவள் அவனை மருவ முன்வர, சரேலென பூர்ண சந்திரன் தடுத்து அப்புறம் விலகினன். அதுவரையில் அம்மடந்தை வைத்திருந்த அன்பனைத்தும் தக்ஷணமே வன்பாக மாறியது. வீழ்ந்தாள் தரையில், தலைவிரிகோலங் கொண்டாள், பாதகம் நேர்ந்ததெனக் 'கூகூ' வென அலறினுள் : சுலோசனையின் கூக்குரலால் கிடுகிடுத்தது அக்கேளீக்ரகம்.

## அரசனின் ஆக்ஞை.

இளையராணியின் அழுகுரல் கேட்ட அரசன் ஓடோடியும் வந்து பார்க்கையில் தன் இளைய ராணி சுலோசனை அவிழ்ந்த கேசத்தோடு பொருத்தமில்லாத ஒதுங்கிச் சரிந்த உடைகள் தரையில் புரள, கசிந்தொழுகும் கண்ணீரோடு உடல்பதற, அலறும் குரலுடன் மார்பு படபடவென்றடிக்க பெருமூச்செறியவும் அவன்எல்லாம் உண்மைஎனநம்புமாறு தன்னைபூர்ணசந்திரன் தாயென்றும் கருதாது பெண்டாளும் படுமோசத்துடன் நிற்கிருன் என்று முறையிட்டனள். வழக்கை விசாரித்துத் தீர்மானிப்பதேமெய் என்பதை அடியுடன் மறந்த அரசன் தனக்கு இளையாள் மேலுள்ள மோகம் காரணமாக அவள் கூறியதே சத்தியமெனக்கொண்டு, கோபாக்கிராந்தனுய் மகனெனும் பாசத்தை எட்டிக்கட்டித் தன் காவலரை அழைத்து பூர்ண சந்திரனைக்கொண்டுபோய் அவனது கைகளை வெட்டி எறிந்து பின்னர்அவனை ஒருகிணற்றில் தள்ளிவிடும்படி ஆக்ஞாபித்தான். இதுவும் விதியின் பயனேயென மதித்த பூர்ண சந்திரன் காவலரோடு சென்றுவிட்டான்.

## அன்னையின் பாசத்திற்கு எல்லையேது

சம்பளம் பெற்றுச் சேவகம் செய்து வயிறுவளர்க்கும் காவலாளர்கள் கொற்றவனின் ஆக்ஞையைசிரமேற்றூங்கி பூர்ணசந்திரனை அடவிக்கழைத்துச் சென்று, அரசனிட்ட ஆக்ஞையை நிறைவேற்றினுர்கள். துடித்துக்கதறிப் பதறிய பூர்ணன் பாழுங் கிணற்றில் வீழ்ந்துத் தத்தளித்துத் தடுமாறும் நிலைமையை ஞானியரான கோரக்னுத் அறிந்து தமது ஞான திருஷ்டியினுல் நடந்தேறிய சம்பவங்களை செவ்வையாக உணர்ந்தார். சற்றும் தாமதியாமல் அவர் கிணற்றண்டை சென்று தமது தவவலிமையால் வெட்டுண்ட கைகளை

மீட்டு பூர்ணசந்திரனுக்களித்து அவனை அந்தஇக்கட்டினின்றும் தப்புவித்து தமது ஆசிரமத்திற்கு அழைத்துச்சென்றார். இதற்குள் அரசனின் முதல் மனைவியான லலிதா தேவி சென்ற புதல்வன் திரும்பவேயில்லையென ஏங்கினவளாய் சுலோசனைதேவியின் அந்தப்புரம் சென்றுவினவ, அங்கு தன் புதல்வனுக்கு நேர்ந்த அபவாதத்தையும் துன்பத்தையும் அறிந்தனள். தக்ஷணமே ஏதொன்றும் தோன்றாது மதிமயங்கி தன் நிலையறியாதவளாய் பிரலாபித்தாள், தாரணியில் தொப்பெனவிழுந்தாள், புரண்டு புரண்டு அழுதாள் விம்மிவிம்மித் தேம்பினள், எதிலும் நாட்டமில்லாமல் பித்தம் பிடித்த பாவைபோல் ஓவென்றலறி வீதிவீதியாகச் சுற்றி இறுதியில் ஓர் அடவிப் பிரதேசத்தில் நுழைந்தாள். கண்ணே, மணியே, என்கண்மணியே, பூர்ணசந்திரா என்று கதறிக்கொண்டே கால்போகும் வழியே அடவியிற் செல்லுகையில், மரக்கிளையொன்றினால் மோதுண்டு ரத்தம்பீறிட்டடிக்கமாநிலத்தில் வீழ்ந்தனள் என்னே அன்னையின் தயை !

## குருவின் லோகோபகாரம்.

புத்திரபாக்கியமில்லாது தவித்துப் பலநாட்கள் ஆனபிறகு அந்த பாக்கியத்தை எந்த கடவுள் தனக்கு அனுக்கிரகித்தாரோ அக்கடவுளே தன் சேயைத்தன்னிடம் கொடாது பிரித்துவிட்டார் என மதித்த லலிதாதேவி உதிர கூபத்திற் கிடந்து அடவியிலே புரண்டழுது அழுது பிரலாபித்தாள். பூர்ண எங்குற்றாய், பூர்ண எங்கு போனாய், பூர்ண, என் கதிஇப்படியுமாகுமா என்று தவித்துக்கொண்டிருக்கையில் அங்கு ஒரு பெரியார் தோன்றி அவளுக்குத்தேறுதல் சொல்லிப் பின்னர் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். இரவும் பகலும் சேர்ந்துவருவதையொப்ப சுகமும் துக்கமும் சேர்ந்தே வருவது உலகில் சகஜம். ஆதலால் இப்பொழுது சங்கடமாயிருந்தாலும் கூடிய சீக்கிரத்தில் நன்மை சம்பவிக்கும், ஆகவே மனோதைரியத்துடன் இருப்பாயாக என்று அவ்ளுக்குத்தேறுதல் கூறினார்.

## பூர்ணனின் பிக்ஷாடனம்.

குருகோரக்நாதருடன் பூரணன் இருந்துவரும் நாளில் ஒரு நாள் குருவானவர் பூர்ணனை அழைத்து, தனிமையாக ஒரு வார்த்தை பேசலுற்றார். மாளவ தேசத்தில் ஆண் வாடையில்லாமலே ஓர் அரசிளங்குமரி ராஜ்யபாரம் செய்கிறாள். அவளுக்கு 'சுந்தரா' என்று பெயர், அவள் யௌவன பருவமுடையவள், வண்டுமொய்க் கூந்தலுடையாள், வீரமும் தீரமும் வாய்ந்த வனிதா ரத்தினம், இனிமையிற் சிறந்த பொன்மொழிப் பாவை. தணிவும் பணிவும் இல்லாத் தருணீமணி. கௌரவங்கொண்ட காந்தாமணி, வனப்பிற்சிறந்த வீர வனிதை ஆடவர் அண்டையிற் வரலாகாதென கட்டியக்கூறி கண்டித அரசு செய்யும் மோகனமடந்தை இவளது வைராக்யத்தை அடக்குவதே சரி என்றுசொல்லி அச்சுந்தர ராணியிடம் சென்று பிக்ஷை கேட்பாயாக என்றார். உடனே பூர்ணன் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில்காஷா

யம் உடுத்தி நெற்றியில் விபூதி பூசி தண்டுகமண்டலதாரியாய்ப் புவிதுறந்த புண்ணியரோவெனப் பார்ப்போர் பிரமித்துக் கூறவல்ல சாதுவையொப்ப சென்று பரீக்ஷார்த்தமாக இரப்பு மன்றாடினான். அச்சமயம் இருவரும் நேரில் சந்தித்து ஒருவரைஒருவர் எதிர்ப்பட்டு நின்றனர். உடனே உள்ளத்தில் உதித்தது ஓர் உணர்ச்சி, 'கண்டதும் காதல்' எனும் முதுமொழி இங்கு நிதர்சனமாயிற்று. ராணி சுந்தராவின் வைராக்யமெல்லாம்பூர்ணனின் முகமண்டலத்தை பார்த்த பிறகு பரிதியைக்கண்ட பனியைப் போலப்பறந்தோடின. அவள் அதைவெளிக்குக்காட்டாமல் பூர்ணனைப்பலசோதனைக்குள்ளாக்கினாளெனினும் அவையனைத்தும் நிறைவேற்றிய பிறகு பூர்ணன் தன் குருவினிடம் திரும்பினான்.

## பூர்ண சந்திரனின் மங்கள விலாஸம்.

அதேசமயத்தில் சாலவபுரியில் மந்திரியாயிருந்த குரூரசேனன், சாலிவாகன அரசனையும் சுலோசனாதேவியையும் சிறையிலிட்டுச் சாலவபுரியை அபகரித்துக்கொண்டதாக ஒருயுத்தவீரன் ஓடோடியும் வந்து குருவிடம் தெரிவித்தனன். இச்செய்தியைத்தெரிவித்த அவன் யுத்தத்திற்பட்ட காயங்களால் அவ்விடமே வீழ்ந்து மாண்டான். குருகோரக்நாதர் சாலிவாகனனைக் காப்பாற்றும்பொருட்டு பூர்ணசந்திரனை சாலவபுரிக்கு அனுப்புஞ்சமயம் ராணி சுந்தராவும் சாலவபுரியின் நிலைமையைக் கேள்வியுற்று ஆண் வேடம் தரித்து தன் சேனையோடு புறப்பட்டாள். மத்தியில் பூர்ணனும் இவளும் ஓரிடத்தில் சந்திக்கநேர்ந்தது, பூர்ணசந்திரனை இன்னவனெனத் தெரிந்துகொண்ட சுந்தரா வெகு சமத்காரமாய் தானின்னவளென்று அறிவிக்காமல்அரசனோடு கோட்டைக்குட் சென்று எதிரியின் சேனையை முறியடித்துப் பின்னர் மந்திரி குரூரசேனனைக்கொன்று அரசனையும் ராணியையும்மீட்டார்கள். அதற்கு பிறகே ஆணுடை உடுத்தியிருந்தது ராணி சுந்தராவென்பது பூர்ணனுக்குத் தெரியவந்தது 'கண்ணோடு கண்நோக்கிக்கின் வாய்ச்சொற்கள் யாதுபயனுமில' என்று பொய்யாமொழிப்புலவர் கூறியிருக்கிறாரானாலும் வெறும் நோக்கத்தோடுமட்டுமல்லாது உடனிருந்து யுத்தசந்நத்தளாய் ரணரங்கத்தில்வீரப்போர் புரிந்த தீரநங்கையாகிற ராணி சுந்தராவே இவளென குருகோரக்நாதர் பூர்ணனுக்கு அறிவித்துப் பிறகு அவளை பட்டமகிஷியாக வரிக்கவேண்டுமென ஆக்ஞாபிக்க, அதன்பிரகாரமே அரசன், சுலோசனா, லலிதாதேவி முதலினோர் குருகோரக்நாதரால் விவரமெல்லாமுணர்ந்து ஆனந்தபரிதராய் வீற்றிருக்க, மங்களகரமாக பூர்ணசந்திரனுக்கும், வீரக்கழலணிந்த தீராங்கனையாகிற ராணிசுந்தராவுக்கும் வைபவ விமரிசைகளோடு மங்கள மணம் நன்குநிறைவேறியது. குருகோரக்நாதின் திருவடிகளே சரணம்.

'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக'

A Leading Calcutta Journal writes on 20th July issue **New Theatres Ltd.** "This film Company is responsible for bringing drastic changes in the cinema art for it has practically overhauled everything in it. In the begining there was "unnaturalness" in the films, but its master-piece "PURAN BHAKT" brought in what was really the need of the time. The dialogue of its players is most natural—it seems as if one is speaking in his daily life and this is the beauty which it has introduced in our film industry and is much appreciated by every body.

PURNA CHANDRA is the same tamil version of "Puran Bhakt" It has established a new Record, a new Standard and a new technique in Tamil pictures.



A SCENE FROM "PURANACHANDRA"

## 1. கோரஸ்.

ஸ்ரீநாதா—குணநீதா
சீரோங்கிய கனப்ரபோதா அதீதா (ஸ்ரீ)
ஜெய நிர்வாக சாமள தேக
செல்வ வைபோக நல்குவிவேக
திருவரவணை மிசையுறைதரு
திவ்ய சுக புனிதா (ஸ்ரீ)
தேவ தேவ சுகுணாளா (அஅஅஅ)
தேவி திருவின் மணவாளா
திருவைகுந்த வாச மிகுந்த
திவ்யமலர் நயனனே
தினகரனே அருள் பரனே
தேவ தேவர்கள் துதி
செய்யும் கனனே (ஸ்ரீ)

## 2. காமிக் ஸாங்.

மகாஜனங்களே மன்னன் பிறந்திட்டாரு (மகாஜனங்களே)
மாதமும்மாறிபெய்து பூமிசெழித்தோங்கும் பாரு (மகா)
இஷ்ட தெய்வங்களுக்கு இன்று பூஜைபோடவேணும்
ஏக மனதுடனே பாடிக்கொண்டாடவேணும்(மகாஜனங்களே)

## 3. சாலியன்

இத்தனை நாட்களாய் மைந்தனில்லாமல்
ஏங்கியிருந்தேனே ஈசனின் அருளில்
புத்திரன்வந்து பிறந்தனன் பார்க்க
பொருத்தமில்லாதது கர்த்தனின் அருளோ இருளோ
தெய்வமே இதுஉந்தன் திருவுளச்செயலோ
தேடி உனை வணங்கும் நானுனக்கயலோ
உய்யும் வழியறியாதுளம் குலைந்தேனே
உத்தமா நீ எம்மைக்காத்தருள் பரனே அரனே.

## 4. பூர்ணன்.

ஆஹா என்மனதுகந்த அன்னப்பறவைகாள்
ஓஹோ மகிழ் கொண்டாடும் உன்னத மயிலினங்காள் (ஆ)

கூகூ என இசை கூவிடும் குயில்காள்
கொண்டலாத்திகாள் கொஞ்சிடும் கிள்ளைகாள்
மாடப்புறுவினங்காள் மகிழ்தரும் குருவிகாள்
நாடி நீர் மகிழ்வோடு நல்லிறைகொள்வீரே. (ஆ)

### 5. மண்டுகன்.

அன்னப்பறவைகள் கூடிக்கொண்டு கூடிக்கொண்டு
ஆனந்தப் பாட்டுகள் பாடிக்கொண்டு
இவர்—என்னை மறந்து இருக்கக்கண்டு
எடுத்தேன் கல்லைக்கொண்டுதான் விரட்ட (அன்)
இந்த விதம்செய்த பக்ஷிகளா பக்ஷிகளா
என்னைப் பிரிக்கவே பார்த்தீர்களா
மன்னவருக்குத்தெரியும்படி
மனந்தளராமல் விரட்டுவேனே. (அன்னப்பறவைகாள்)

### 6. ஓர் ஸாது.

(நானே னேவினேன் என்ற மெட்டு)

நானே நம்பினேன் உனது பாதம் (நானே)
நான் மறையும் புகழ் வேலவனே கொடி
சேவலனே எனையாள் பவனே தினம் (நானே)
தாமதமேனோ சம்மதம் தானோ
வெந்து மனம் நோகச்செய்திட்டாயே கைவிட்டாயே.(நானே)
வள்ளியின் மோன தெள்ளிய ஞான
ரஞ்சிதனென மகிழுவோனே—மணியே
கெஞ்சியே அழைக்கின்றேன் மயிலோனே முன்வருவாய் (நா)

### 7. கோரக் நாத். பீம்பளாஸ்.

#### பல்லவி.

சம்புநாம சந்திர சூட
ஸாம கான ப்ரிய விபோ

#### அநுபல்லவி.

ஸர்வ தேவ ஸ்தோத்திர புனிதா
ஸர்ப்ப பூஷணா லங்காரா (சம்பு)

சரணம்.

காமதகன லலாட நேத்ரா
காருண்ய கபால பாத்ரா
காலகண்ட கைலாஸ வாஸ
கௌரீ காந்தப்ரிய விபோ (சம்பு)

## 8. பூர்ணன்.

பரந்தாமா—பணிந்தேனே
துரந்தரன் உமது மகிமையைத் தெரிந்திட
தொல்லுலகில் எவரே (பரந்)
எவ்வித வீரர்—எவ்விததீரர்
எவருந் தன்பெருமையை அறியவல்லாரே
ஏழையேன் நானே இன்னருள்தானே
இசையுடன் பெறவே நாடி வந்தேனே
எனையாண்டருளவே உனை நினைந்தேனே
ஈசனே பவ நாசனே (பரந்)

## 9 சுலோசனு.

மாலைப்போது இதுவே நல்ல நேரம்
மந்தமாருதத்தின் சுகஆரவாரம்
கோலமிகும் பக்ஷிகள் கூட்டத்தின் ஸாரம்
கோதை எனக்கிதுவே மிக அனுஸாரம்

தோகையரு

வதைமிகும் எந்தன் யௌவனம் வீணே
ஒழிந்ததற்கு ஒருவழியும் நான் காணேன்
மனதுக்கினிய எழில் காதலனில்லா
வருத்தமிதை மாற்ற வகையிலை சொல்ல (மாலைப்போது)

## 10. லலிதா. ஜாவோஜாவோ.

வாராய் வாராய் என் பாலா பூர்ண
மகிமை யனுகூலா நீ வாராய் (வாராய்)
சீராறு மாதவ தேசிகனருளால்
க்ஷேமமாய் வந்திடுவாய்
செல்வனே உனை நினைந்தே ஏங்கும் எனக்
கேமகிழ் தந்திடுவாய் நீ (வாராய்)

எத்தனை நாளாய் உன் பிரிவாலென்
ஹ்ருதயமும் நொந்தனனே
வித்தகனே என் புத்திரமணியே
மிக வுளங்குளிர்ந்தனனே நீ (வாராய்)

தொகையறு.

இன்றே சர்வேச்வர பஜனை
இன்றே செய்து நினை
நன்றே வருக நன்மையே பெருக
நாதன்குருவருளே புரிக நீ (வாராய்)

## 11. சுலோசனு

அஸாவேரி.

சந்தோஷம் தரும் மதுபானம்
சம்ப்ரமமாக நல்லின்பமுறத் தருணம் (சந்தோ)
சிந்தை மிகமகிழ சேர்ந்தவர்கள்புகழ
வந்து மனத்திலின்பம் வாய்க்க உளமினிக்க
வாய்மைபேச மணவாசம்வீச மானிலத்து வாலிபரும்
மற்றுளோர்களும் குடித்து (சந்தோ)

## 12 பூர்ணன்.

நீதி ஈதல்லவே தேவி
நினைத்து மதுவை
குடிக்கப் பதறு தாவி
இதுவோ ஸஞ்சீவி (நீதி)

ஆதிமறைமுதல் ஓதிடும் பாதகம்
அனைத்துமிதனுல் பெருத்தத் தீதாகும்
ஆகா—மதி மோசமீ தல்லவோ
ஆருயிர்த்தாயே நீர்போதனை செய்வது (நீதி)

சாதகமாக மகன் தந்தை தாய்க்குமுன்
சார்ந்து பணிந்து விறைந்து தொழுமென்னை
தீதகமாகவே நீர் ஓதிடும் வார்த்தைகள்
தேகம்மிக சோர்ந்து வருந்துதே
தேர்ந்து பாராமலே போதிக்கும் வார்த்தைகள் (நீதி)

### 13. சுலோசனா

மனதார உனை நானே காதலித்தேனே
மானிலமீதெனையாளும் புனிதனே (மனதார)

நினைவை மறந்தனனே நேயா உனை நம்பினேனே
நீக்க ஒண்ணாதெனை கார்த்திடவேணும்
நெஞ்சறியச் சொன்னேன் வஞ்சமில்லை காணும் (மனதார)

கண்ணும் உடலும் திருமுகம்
எண்ணுமுன் மனதில் இல்லையோ ஆசை
என்துரையே இன்சொல் தந்தருள்வீரே (மனதார)

### 14. சுலோசனா:— மால்கோஷ்

மங்கையானும் மானிலத்தில்
பங்கமுறலாமோ ஐயோ
உங்கள் மைந்தன் செய்த செய்கை
உலகில் ஞாயமோ என்நாதா
தாயென்றென்னை எண்ணிடாது
தழுவவேமுயன்றான் பாவி
மாயனான உம் சேயனுக்கு
ஞாயமேது மில்லையோ ஐயோ (மங்)

### 15. பூரணன்

(மாண்டு)

எனதரும் தந்தையே
என் சொல்லுவேனே
இசைமிகும் தாய்மொழி
மறுத்துரையேனே (என)
குற்றமே சொன்னாலும்
குணத்தை மொழிந்தாலும்
உற்ற இவ்வுண்மையை
உரையேனெக்காலும் (என)

தோகையறா.

பெற்ற என்தந்தையே பேணிடேன் உயிர்தனையே
சிற்றன்னையார் சொல்லை சிறுவன்யான் மறுத்திடேனே (என)

## மண்டுகன்—தாதி தர்க்கம்.

### 16. மண்டுகன்.

பால்கோவாவும் பதர் பேணியும்
பண்பாய் பூரணா அருந்துகின்றாய் (பால்)
பழய அவியல் கறிகள்
பக்குவமாய் தின்னுகிறேன் இதை
பார்த்துப்பார்த்து என்மனது
பதப்படத்தக்க விதத்திலாச்சு (பால்)

(தாதி)

கண்ணாளா நான் உந்தன்மேலே
காதல்கொண்டு இருக்கிறேனே (கண்)
மற்றவர்களை நினைத்து என்னை
மறந்து நீயும் பேசுராய்
மனதுக்குகந்தவள் நான்
இல்லையென்று நினைக்கிறாய் (கண்)

மண்டுகன்.

பஜ்ஜிவடையில் இச்சைவைத்தேன்
நல்ல பக்ஷணங்கள் இல்லையே
மிச்ச மீதிகளை நான்
மேன்மையாக அருந்துரேனே (பஜ்)

(தாதி)

பக்ஷணங்கள் லக்ஷம் தருவேன்
இக்ஷணமே அருந்துவோம் (பக்ஷ)
எந்தநேரம் பார்த்தாலும்
தின்பதிலே இருக்கிறாய்
என்னைக்கண்டுமே நீயும்
ஏன் விழித்துப்பார்க்கிறாயினி (பக்ஷ)

### 17. சுலோசனா.

(அடபயலே என்ற [redacted]டு)

மனமகிழ அளித்திடுவேன்
மதுர மிகும் பானமிதை (மனா)

எனதரும் மன்னவனே
இன்னமுமேன் வீண்மயக்கம்
எந்திழையாளுடனிருக்க
ஏங்குவதேனோ தயக்கம் (மன)

என்மனங் கனிந்திட
அருந்திடு வீரித்ததியே
சின்னஞ்சிறியோன் பிழையை
சிந்தித்தலேனோ பதியே. (மன)

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணி எண்ணி ஏங்குவதேன்
கண்ணாளனே சமயம்
கண்ய முறபருகிடுவீர் (மன)

### 18. (பூரணன்)

அகடா வர்ணமெட்டு.

விதியோ வினையோ எதுவோ அறியேன் (விதி)
சதி ஈதோ தெய்வமே (விதி)
கதியறியேனே இத்ததி துணைதானே
கடாக்ஷித்தருள் செய்குவார்யார் வேளையில் (விதி)
என்செய்குவேன் ஈசா (விதி)

### 19. (லலிதா)

(ஆதரவின்றி என்ற மெட்டு)

புத்திரமாதவ ரத்தின மணியே
பொன்மதிமா முகனே என்மகனே
வித்தகனே உந்தன்மெய் பிரிவாலே
வேதனையடைந்தே வாடுகின்றேனே
ஆதாரம் நீயென அகமகிழ்ந்தேனே
ஆகுலமிக அடைந்தே நொந்தேனே
பூதலமீதுனை என்று காண்பேனோ
பெருந்துயரடைவேனோ இது வீணே (புத்திர)



பூர்ணசந்திரன் படத்தில் ஓர் காட்சி.

## 20. (கோரக்நாத்)

(கல்யாணி.)

பல்லவி.

சிதம்பரம் என மனம் கனிந்திட
ஜபம் செய்யக்கொடிய ஜனனமரண
பயமொழிந்திடும் சிவ (சிதம்)

அனுபல்லவி.

பதஞ்சலியும் புலிபதம் திகழ்முனியும்
நிதம்பரவ வருள்நிறைந்த வுருவொடு
கதம்ப மலரணி குழலொடு திகழ் சிவ
காமிமருவும் ஸ்வாமியே எனது கனக
ஸபேசனை நடேசனைத் தொழுது சிவ (சிதம்)

சரணம்.

மோகாந்தகாரமதில் முழுகியழிந்தென்னாளும்
மோசம் போகாதே சொன்னேன் மூடநெஞ்சமே
சோகாந்தமுற நரஜன்மமு மிழந்து கொடும்
துன்பம்தரும் நரகவாதை மிஞ்சுமே
ஸ்ரீகாந்தனும் ஸரஸ் வதீகாந்தனும் பணிய
தேகாந்தத்துள் நடிக்கும் ஆனந்த தாண்டவத்தை
தாகாந்த மடையக்கண்டே காந்தக்களிபெற
தத்தரிகிட திம்தரிகிட திமிதக தளாங்குதோம்
தகும் எனவே நடமிடு (சிதம்)

## 21. (லலிதா)

(ஈவியோகசலதி என்ற மெட்டு)

உன்னைத்தேடி தேடி யலைகிறேனே
உளம் வருந்துகிறேனே என்மகனே (உன்னை)
அன்னையென் மனம் நீயறியவு மில்லையோ
அன்பில்லையோ அருந் துயரே என்கிலையோ (உன்னை)

முன்னம் பிரமனருள் விதிச்செயலிதோ
முளுமென் துயர் தனை மாற்றலாகாதோ
மோசம் எது விளையுமோ அறியேன்
ஈசா ஈதுன் அருளிதோ குறியேன் (உன்னை)

22. (ஓர்ஸாது.)
பிலஹரி ஆதி.

மனங்கலங்கிடலாமோ மங்கையே நீ
வனமதில் வந்தநீ வழியறி யாதினி (மனங்)
அடியவரைக் கார்க்கும் அண்ணலை நினைந்திட்டால்
கொடிதனில் படுந்துய ரொடுங்கிடும் இக்கணமே
திடமுடன் வந்திடுவாய் உனதிருப்பிடம் சேர
உதவி புரிந்துனை உடனழைத் தேகுவேன் (மனங்)

23. (லலிதா.)
கமாஸ்.

காவாய் காவாய் கருணா ஜலதே
தேவே தேவே தெரிவை யென்பாலனே (காவாய்)
ஆநந்தக் கொடியே அற்புததேனே
தீனதயாநிதே தீருமென் குறை தன்னை (காவாய்)
அரஹர சிவ சிவ அனக உமாபதே
அருளமுதம் தந்து ஆதரிப்பாய் வந்து (காவாய்)

24 ஆச்ரமவாசிகளின் கோரஸ்.
ரகுபதிராகவ என்ற மெட்டு.

அரஹர சாம்பவ மகாதேவா
அனக உமாபதே நீ வா வா
பரமகுணநிதே பணிதரனே
பக்தரை யாண்டருள் சங்கரனே
காலகண்ட கங்காதரனே
கைலையின் வாஸ நிறந்தரனே
நீலஜடாதர நிர்மலனே திரு
நேத்ரகபால ஸசீ தரனே (அர)

25. (பூர்ணன்.)
(ஸ்ரீசிவ ஷண்முகவேலனே என்ற மெட்டு)

அந்தம் நிறைந்தப் புருவினமே
உவந்து மகிழுவேனித்தினமே
வந்து அருந்து வீரிக்ஷணமே
தந்திடுவேனே நல் பக்ஷணமே

## 26. (கோரக்நாத்)

ஹரிகாம்போதி.

பல்லவி.

உண்டென்று உருதிகொள்வாய் மனமே

அநுபல்லவி.

அண்ட பிண்டம் எதிலும் நிறைந்து
அங்குமிங்கும் தங்கும் ஒருவன் (உண்)

சரணம்.

பலகோடி உயிரினங்கள்
படைத்தாட்டும் வித்தைகாட்டி.
பலவேறு ஸமயம் நாட்டி
பலநாம ரூபமோடு விளங்கும் ஒரேதெய்வம் (உண்)

## 27. மண்டுகன்.

மாளிகை தன்னிலே மன்னவரே விட்டுப்போனீர்
மெய்யென்று உன்னைநம்பி வந்ததுதான் தப்பிதமே
மேலுக்கு மேலும் நீ செய்யும் சூது
நாளுக்கு நாளாய் அறிந்தேனைய்யா
இது தகுமா இன்னும் சொல்லட்டுமா
இந்தநேரம் எந்தனை கவனிப்பவர் யாருமில்லை (மாளி)

## 28. பூர்ணன்.

(மால்கோஸ்)

28. குருவரா நின்பாதம் வணங்கினேனே
குறையாபவ ஸாகரம் கடந்தேன்
பெருமானுன் திருவருள் கருணைபெற்றேன்
பேச ஒண்ணாத பேரின்பமுற்றேன் (குருவரா)

## 29. பூர்ணன்.

(காம்போதி)

29. குருநாதன் திரு ஆக்ஞை
கொண்டுவந்தேன் பிக்ஷைக்காக
கருணை உறு பெரியோர்கள்
கனவாக்கை மறக்காமல்
குருநாதன் திருஆக்ஞை கொண்டுவந்தேன்

### 30. பூர்ணன்.
(ஸ்ரீரஞ்சனி)

கனவிலோ கடலிலோ கனமலை மிசையிலோ
அனவரதமென்குரு அருளினால் வீழ்வனே
ஊனழிந்தொழியினும் உயிரிறந்தழியினும்
ஞானஸற்குருபரன் த்யானம் நான் மறவேனே (கன)

### 31. பூர்ணன்.
(மாங்காய்ப் பாலுண்டு)

மெஞ்ஞானப் பொருளே—உயர்
மேலாம் தவத்தருளே
அஞ்ஞானம் அகற்றுவீரே அவனிமீதே (அஞ்ஞா)
பாதார விந்தத்தில்
பணியும் பக்தன் எனக்கு
ஆதாரம் வேறில்லையே பாரினிலே (ஆதா)
உம்மை நான் நம்பியே
உலகத்தை மறந்தேனே
உயர்வான துறவரத்தை உகந்தேனே (உயர்)

### 32. ராணி சுந்தரா.

பேதையாள் அறியாமற்செய்த
பிழைபொருத்தருள் வீரித்ததியே
சோதனை செய்த இப்பாவிக்
கார் தயாநிதியே கதியே
பாதபூஜை செய்யும் பாக்யம்
பாரில் பெற்றுய்தேன் மகிழ்ந்தேன்
வேதனே வேதாந்தனே நல்
போதனை புரிவீர் இத்தினமே (பேதையாள்)

### 33. பூர்ணன்.

மாயாப்ரபஞ்சமாதவமே
தாஸானு தாஸனே (மாயா)
மாதாபிதாவும் நீயே
மற்றென் துணைவனும் நீயே
பாதாரவிந்தமே கதியே
வேதாந்த மூர்த்தியே (மாயா)

நாதா உம்மைப்போல் ஏது தாஸன்
என்னுடைடென்ன வாது
நானே இதற்கெல்லாம் ஹேது
நாதா வந்தாளிப்போது (மாயா)

## 34. ராணி சுந்தரா.

பூரண சுந்தரனே பொற்புயமந்தரனே
பூத்தமலர்முகனே எனை காத்தருள் நாயகனே
தாரணியிலுனையே தஞ்சமாய் நம்பினேனே
தன்யகுணகரனே என் இன்னுயிற் காதலனே
உன்பாதமே கதியே என் உண்மை யுணர்ந்தனனே
உற்றதொரு நற்றுணைநீர்
சத்தியம் நம்பினேனே.

## 35. சுலோசனு.

அஸாவேரி.

விதி ஏதோ விழலாகினேன்
அந்தோ என் செய்வேன் (விதி ஏதோ)
ஆதி அன்னைக்கருவில்
அமைத்ததும் ஈதாமோ
ஆகாத மகாபாபி
யானேனே பூமேலே (விதி)

## 36. மண்டூகன்.

தீட்டிடுவேனே திடமுடன் நானே
ஜயம் தரும் வாள் தனையே
நாட்டிலென்னை எதிர்த்திடும் வீர
நரன் எவன் எனக்கிணையே
நானிலமீதினிலே
பூணுமென்போர் நிலையே
போக்குவோ ரிங்கிலையே
விரைவாய். (தீட்டிடுவேனே)

## 37 சுலோசனு.

தன்யாசி.

பல்லவி

குற்றம் மிகவும் உனக்கே நான்
செய்தாலுமென் குறைபொறுப்பாய் மகனே (குற்)

அநுபல்லவி.

உற்ற துணை உனையல்லாது வேறே
உலகினி லெங்களை காப்பவர் யாரே (குற்)

சரணம்.

பொய்யுறைத்தேன் உனை
உயிர் கொலைச்செய்யப்பழி
புனைந்துறைத்தேன் நான் பாவி
ஐயமிலை எனைக்கொன்றாலுந் தகுமே
ஆருயிர்பெற்று வாழ நினையேன் நிச்சயமே (குற்ற)

## 38. லலிதா.

கைசேனு ஹாயேமதினு என்ற மெட்டு.

அந்தோ என் ஆசைக்குமாரா உன்
அன்னைமனத்துயர் தீர
வந்து மகிழலாகாதா மாதாவின் மேலென்ன வாதா
சிந்தை கலங்கி நொந்தேனே செல்வா உனைபிரிந்தேனே
வெந்துயரம் சகியேனே வேறோர் கதியறியேனே
தாயின்மேலேனோ இக்கோபம் தமியாளெந்தன் பரிதாபம்
நீயறியாததுமேனோநெறியோமனுமுறைதானோ. (அந்தோ)

## 39. லலிதா.

காயல்தோடி.

என்றுனைக்காண்பேன் பாலா சீலா
என்குலமாமணியே நானினியே (என்றுனை)
அன்றுன் தலையில் எழுதியஎழுத்திதோ
ஐயோ தெய்வமே அருள் செய்யலாகாதோ (என்றுனை)
பால்கொடுத்தறியேனுன் பனிமதிமுகத்தை
பார்த்தறியேன் உனை எடுத்தணைத் தறியேன்
கோல அணிகள் புனைந்தலங்கரித்தறியேன்
கொஞ்சியறியேன் முத்தங்கொடுத்தறியேனே. (என்றுனை)

## 40. லலிதா.

ராகமாலிகை:—காம்போதி, பைரவி, கன்னடா, மோகனம்

இனியே தெமக்குனருள் வருமோ எனக்கருதி
எங்குதென் னெஞ்சமய்யோ
இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
அனியாயமாயிந்த உடலை நான் அன்றுவரு
அந்தகர்க்காளாக்கவோ
வாடித்திரிந்து நான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல் நன்றோ
கனியேனுவறியசெங்காயேனு முதிர்சருகு
கந்தமூலங்களேனும்

கனல்வாதை வந்தெய்து அள்ளிபுசித்துநான்
கண்மூடிமௌனியாகி
தனியே இருப்பதற்கெண்ணினேன் எண்ணமிது
ஸ்வாமிநீர் அறியாததோ
ஸர்வ பரிபூரண அகண்ட தத்துவ
ஸச்சிதானந்த சிவமே.

**41. கோரக்நாத். ஸிம்மேந்திரமத்திமம்.**

பல்லவி

இகபர மெனு மிரு உலகிலும் பரஸுக
முதவு ஸுகுணசீலா (இகபர)

அநுபல்லவி.

குகசரவணபவ சிவபாலா சிவ
குருவெனும் புகழ்பெரும் வடிவேலா
அகமுறுமவுணர்கள் குலகாலா
அமரருலகு மகில வுயிரும் வளர அருள்க்ருபாலவால (இக)

சரணம்.

தயை நிறைந்த திருவிழிகள் பனிரண்டும்
தவழ்ந்த முருவல் வதனமாறும்
புஜகராஜனென திகழ்ந்த பன்னிரு
புஜங்களுமகல மணி பணியும்
மயலொடு மிருபுறம் இருமாதர்
மருவநன் மயின்மிசை வருவாயே
பயஸிஜபதவிணை தருவாயே
பவகடற் கரை கடக்க அருண்மரக்
கலம்கொடுக்கும் (இகபர)

**42. மண்டூகன்.**

ஓங்க கல்யாணத்திலே—என்னை
கொஞ்சம் மறந்திடாதிங்க
காலமெல்லாம் நானுங்கூட இருந்தவனுங்க (ஓங்க)
கிடைப்பதிலே பாதி தாரேனென்று சொன்னீங்க
இப்ப கிட்டுமோ கிட்டாதோ என்று
நானிருக்கேனுங்க (ஓங்க)

**43. தாதி.**

கையில் வெண்ணையிருக்க
நெய்க்கழுவார்கள் போல
கண்கலங்கி நிற்கலாகுமா உண்மைக்
கண்டுமென்னை நீ மறக்கப்போகுமா
கைகாரனே எனது அத்தானே
நீ மயங்கி (கையில்)

இத்தனை காலமெல்லாம்
நம்பி யிருந்தேனே உன்னை
பித்தம் பிடித்தவன்போல் பேசுகிறாய்
கையை — மெத்தப்படித்தவன் போல் வீசுறாய்
மீசையில்லை ரோசமில்லை
மானமில்லை வெட்கமில்லை (கையில்)

**44 ராணி சுந்தரா — பூர்ணன் தர்க்கம்.**

சுந்தரா.

மன்னா ஸம்பன்ன தீரா
மகிமை பிரதாபா கம்பீரா (மன்னா)

**பூர்ணன்.**

கன்னல் மொழிமானே தேனே
காதல்கொண்டேனுன்மேல் நானே
இன்னலில்லாமல் யாமும்
என்றும் நன்றாய் வாழுவோமே.

சுந்தரா.

முன்செய்த புண்யவசத்தால்
மெய்க்குழலாளுமையடைந்தேன்
சன்மார்க்க நீ தருமது
சரண்பணிந்திட பலனடைந்தேன்

பூர்ணன்.

பொன்னொளி மேனி மயிலே
பூவையே வனக்குயிலே

(இருவரும்)

மனோரம்யமாகவே நாம் மகிழ்ந்திட தருணமிதே
என்னாளுமென்னை இணைபிரியாமலிருந்திடவே (மன்னா)

மங்களம்.

## வெற்றிமாலை சூடிய உன்னத படத்திற்கு புகழ்மாலைகள்.
## தமிழ் பேசும் படவானில் ஒப்பற்ற நக்ஷத்திரம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

"... இந்தப் படத்தில், ஒலி பதிவு, காட்சி ஜோடிப்புகள், படம் பிடித்திருப்பது முதலியன்வைகள் தெளிவாகவும், சுத்தமாகவும், இருக்கின்றன."

—தினமணி

"புகைப் பட உருவங்கள், இயற்கை த்வனியின் இயல், இனிய கானத்தின் இசை, பல்வகைக் காட்சிகளையும் தோற்றங்களையும் படமெடுத்த பான்மை — ஆகிய இவைகளெல்லாம் தத்ரூபமாக விளங்குகின்றன ... இந்தியாவின் பிராசினப் பெருமையைச் சேர்ந்த வகைகள் பல இந்தப்படத்தில் காண்கின்றன."

—இந்துநேசன்

"கலாபிமானிகளால் போற்றத்தக்கதும், எல்லா அம்சங்களிலும் சிறந்ததாகவுமுள்ள தமிழ் பேசும் படம் ஒன்று வருமா என்று எதிர் பார்த்தவர்கள் இந்தப் படத்தைப் பார்த்தால் அத்தகைய படம் "பூர்ண சந்திரா"வே என்று அபிப்பிராயம் கொள்ளாதிருக்க மாட்டார்கள் ... படத்தின் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை லைட்டிங் ரிகார்டிங் முதலியவைகள் இந்தப் படத்தில் முதன்மையாக இருப்பதுபோல் வேறு எதிலும் இதுவரை காணப்படவில்லை ... நடிப்பில் நடிகர்கள் இணையற்று விளங்குகின்றனர் ... நடிகர்களின் பேச்சும், அதற்கேற்றபடி நடிப்பும், வேஷம் போட்டுக்கொண்டிருப்பதும், இயற்கையாக விருக்கிறது."

—சுதேசமித்திரன்

"இக்கதைக்கேற்றவாறு நடிகர்களும், பாடல்களும், காக்ஷிகளும், தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. போட்டோகிராபி, தொனி பதிவு, நன்றாகவே இருக்கிறது."

—தமிழ் நாடு

# Our
# Outstanding Talkie Pictures.

| | | | |
|---|---|---|---|
| 1. SAKKUBAI ... | Barna Pictures | – | Tamil |
| (with select Artistes from S. Indian Stage) | | | |
| 2. NANDANAR ... | New Theatres | – | do |
| 3. POORANA CHANDRA | do | – | do |
| 4. MIRABAI ... | do | – | Hindi. |
| 5. PURAN BAKTH | do | – | do |
| 6. CHANDIDAS ... | do | – | do |
| 7. YAHOODI-KI-LARKI | do | – | Urudu. |
| 8. SUBEKA SITARA | do | – | do |
| 9. NOORIMAN ... | Arvind Cinetone | – | do |
| 10. AH-E-Mazluman | New Ton Films | – | do |
| 11. AMEENA ... | Kali Films | – | do |
| 12. Sree Krishna Tulabaram | do | – | Telugu |
| 13. SATI ANSUYA | Barna Pictures | | do |
| 14. Devil Tiger-Jungle thriller | Fox Film | | English |

Also All Bharat Lxmi Pictures including
"**Sati Sakkubai** (Telugu)" & "**Sati Sulochana**" (Tamil)

---

FOR BOOKINGS APPLY TO :

## AURORA FILM CORPORATION,

**FILM PRODUCERS & DISTRIBUTORS**

**66, Armenian Street, G T, Madras**

TEL. AUROFILMS. PHONE : 3368

Sri Krishna Press, West Masi Street, Madura-35.